3. விதி 110-ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்க்கு விடுதிகள் கட்டுதல் மற்றும் அவர்களுக்கு இலவச அகராதியும் Atlas-ம் வழங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், சந்தானம் அவர்கள் ஏதோ கேட்க வேண்டும் என்கிறார். திரு. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கையாகிய மிகவும் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், அதுபோல ஆதிதிராவிட மாணவர்களுக்கும் 116 விடுதிகளை ஆரம்பிப்பதாக தங்களுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதற்காக ஒட்டுமொத்தமாக...

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 216 புதிய விடுதிகள் கட்ட உள்ளோம்.

திரு. லா. சந்தானம்: 216 விடுதிகள் கட்டுவதாக இங்கு அறிவித்திருக்கிறார்கள். அதோடுகூட அந்த விடுதிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என்கின்ற தித்திப்பான செய்தியையும் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. (குறுக்கீடு) 110 விதிக்குள்ளே விவாதம்தான் கூடாதே தவிர, நன்றி சொல்வதற்கு அதிலே வாய்ப்பு இருக்கிறது. நான் நன்றியைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதோடு ஒரு சின்ன கோரிக்கையையும் மாண்புமிகு முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு) தனியார் நடத்துகின்ற சில விடுதிகள் இருக்கின்றன. அவை அரசினுடைய நிதியுதவியோடு நடத்தப்படுகின்றன. இங்கே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது 200 ரூபாயாக இருந்த மாதக் கட்டணத்தை 300 ரூபாயாக ஒவ்வொரு மாணவருக்கும் உயர்த்திக் கொடுப்பதாக அறிவித்தார்கள். அது அரசு விடுதியிலே தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு. இந்தத் தனியார் நடத்துகின்ற, அரசு உதவி பெறுகின்ற விடுதிகளிலே இன்னும் அந்தப் பழைய 200 ரூபாய்தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாணவர்களுக்கும் தயைகூர்ந்து ஏதாவது

உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்கிற ஒரு கருத்து இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சந்தானம் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதமும் பதிலுரையும்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 2006–2007 ஆம் ஆண்டிற்கான இந்த அவையிலே வைக்கப்பட்ட ஒரு இடைநிலை நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக நிதிநிலை அறிக்கை அரசினுடைய வருவாயைத் தெரிவிக்கும். அரசினுடைய திட்டங்களை அறிவிக்கும். அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கத்தைத் தரும். நிதிநிலை அறிக்கை என்று நான் அறிந்தவரையிலே எனக்குத் தெரிந்தது அதுதான். ஆனால் இதுவரையிலே அப்படி அறிக்கைகளை முதலமைச்சர் வைத்தபொழுதுகூட, சில திட்டங்களை அறிவித்தார்கள்; நிதி ஒதுக்கினார்கள்; அது தப்பு, சரி, சரியில்லை என்று பேசினோம். ஆனால் இந்த முறை அந்தத் திட்டங்கள் எதையும் அதிலே அறிவிக்காவண்ணம் அல்லது அதற்கு முன்னாலேயே—நிதி அமைச்சர்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களை, அறிவிப்புகளைத் தனியாக எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தால் நிதி அமைச்சருடைய அறிக்கையிலே நான் எதையும் பார்க்க முடியவில்லை. பலாப்பழம் அறுக்கின்றபொழுதுகூட ஊரிலே பார்த்தோம் என்றால், சுளையை எல்லாம் எடுத்துவிட்டு அதில் நார், நாராக இருக்கும்; அதை எதிர்வீட்டுப் பையன்கிட்டே கொடுத்துவிடுவான்; அவன் இழுத்துக் கொண்டு கிடப்பான். அப்படி முதலமைச்சர் அறிவிப்புகளை எல்லாம் எடுத்துச் சொல்லிவிட்டு, இழுத்துக் கொண்டு இதை வைத்துக் கொண்டு ஏதாவது நடத்தட்டும் என்று சொல்லி விட்டுவிட்டார். அதனாலே